DEPOSITION OF WITNESS

(Chapter X of Civil Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM

MCOP No. 68/2022

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents – RW2

| | | |
|---|---|---|
| Name | : | **விஜயகுமார்** |
| Father Name | : | சேகர் |
| Village | : | கதவு 14/2. மேலப்பொன்னகரம் 8 வதுதெரு,ஆரப்பாளையம், மதுரை –16. |
| Taluk | : | |
| Calling | : | டிரைவர் |
| Religion | : | |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.02.2026.

**முதன்மை விசாரணை:–**

நான் மதுரை, ஆரப்பாளையம், மேலப்பொன்னகரம் 8 வது தெரு, கதவு 14/2. வசித்து ஆக்டிங் டிரைவராக வேலை செய்து வருகிறேன். TN 72 T 4488 என்ற Toyota Qualis என்ற கார் 2ம் எதிர்மனுதாரரான சுப்புராசுக்கு சொந்தமானது. என்னுடைய நண்பர் பிரகாஷ் அவர்களின் குடும்பத்தில் திதி குடுப்பதற்காக சுப்புராசுக்கு சொந்தமான காரை பெற்றுக்கொண்டு ராமேஸ்வரம் செல்வதற்காக நான் ராமேஸ்வரம் சென்று மீண்டும் ராமேஸ்வரத்திலிருந்து மதுரை நோக்கி வரும்போது உச்சிப்புளிக்கு கிழக்கே அரியமான் பீச் அருகே விபத்து நடந்தது. நாங்கள் அரியமான் பீச்சுக்கு சென்றுவிட்டு மீண்டும் இராமநாதபுரம் – ராமேஸ்வரம் மெயின் ரோட்டுக்கு வந்து

மதுரை நோக்கி திரும்பியவுடன் காரில் வந்த குழந்தை சிறுநீர் கழிக்க வேண்டும் என்று கூறியதால் நான் ரோட்டின் இடதுபுறமாக காரை நிறுத்தினேன், அப்போது ராமேஸ்வரத்திலிருந்து இராமநாதபுரம் நோக்கி வந்த இருசக்கர வாகனத்தில் வந்த நபர் காரின் மீது மோதி சாலையில் விழுந்தார். அவர் மீது வண்டி கிடந்தது. அவரை தூக்கி பார்த்தபோது தலையின் வலதுபக்கம் இரத்தக்காயம் இருந்தது. நாங்கள் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அப்போது மேற்கிலிருந்து ஒரு Escort Police வேன் வந்தது– அவர்கள் உச்சிப்புளி காவல் நிலையத்திற்கு சொன்னதின் பேரில் போலிசார் வந்தார்கள். பிறகு நான் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். விபத்திற்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்து காரின் பின்புறம் மோதிய நபரே காரணம்.

3 ம் எதிர்மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை:–

விபத்திற்கு முன்பு 10.07.2021ம் தேதி மதுரையிலிருந்து இரவு 01.00 மணியளவில் இராமேஸ்வரம் கடற்கரையில் திதி கொடுப்பதற்காக கிளம்பினோம் என புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். திதி கொடுததுவிட்டு காலை 08.30 மணியளவில்தான் மதுரைக்கு கிளம்பினோம் என்றால் சரிதான். நான் ஆக்டிங் டிரைவர் என்பதால் இரவுபகல் பாராமல் வண்டி ஓட்டுவேன் என்றால் சரிதான். நான் எவ்வித சமிக்கையும் செய்யாமல், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் திடீரென காரை சாலையில் நிறுத்தியதால்தான் பின்னால் வந்த விபத்தில் இறந்துபோன ராஜேந்திரன் என் காரின் பின்புறம் நேரிட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு முழுக்கமுழுக்க நான்தான் காரணம் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.